ஏர் 9 • உழவு 04 • திருவள்ளுவர் ஆண்டு 2055
விலை ரூ.20/- • ஏப்ரல் 2024 (பங்குனி - சித்திரை)

# சென்னை கொங்கு நண்பர்கள் மலர்

பதிவு எண். : 44/2016

பதிப்பாளர் :
கொங்கு நண்பர்கள் சங்கம். வெள்ளி விழா இல்லம்,
எண் : 34, சீனிவாசப் பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை– 600 014. செல் : 63839 85919
மின்னஞ்சல் : chennaikongu@gmail.com
இணையதளம் : www.kongunanbargalsangam.com

| | | |
|---|---|---|
| தலைவர் | : | கே.கே.ரமேஷ் |
| துணைத்தலைவர்கள் | : | வீ.க.செல்வக்குமார் |
| | : | வி.பி.வீரப்பன் |
| செயலாளர் | : | எம்.அமராபதி |
| பொருளாளர் | : | வீ.ஆர்.பாலசுப்பிரமணியன் |
| இணைச்செயலாளர்கள் | : | சி.அரவிந்தன் |
| | : | பி.ரவி |
| தணிக்கையாளர் | : | ஆர்.பாலசந்திரன் |

## செயற்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| எம்.பொன்னுசாமி | சி.கொங்குவேள் |
| கே.சந்திரமோகன் | எஸ்.சீனிவாசன் |
| டத்தோ எஸ்.பிரகதீஷ்குமார் | விசா எம்.சண்முகம் |
| பி.வி.கல்யாணசுந்தரம் | டி.எஸ்.சந்திரசேகர் |
| டாக்டர் எஸ்.ராஜாமணி | எஸ்.ஜெகநாதன் |
| கே.ஜெகதீசன் | கே.நித்தியானந்தன் |
| ஆர்.சண்முகவேல் | ஆர்.கந்தகார்த்திக் |
| கே.கே.முருகன் | பி.பிரேம்குமார் |
| | சாந்தி சிவசண்முகம் |



மாவீரன் தீரன் சின்னமலை

## ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / சென்னை கொங்கு நண்பர்கள் மலர் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச் சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை. நேர்காணல்களும், சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துகளும் அவரவர்களின் சொந்தக் கருத்துகளே.

**Published by :**
K.K.Ramesh on behalf of
Kongu Nanbargal Sangam, Velli Vizha Illam,
No:34 Srinivasa Perumal Sannathi 1st St,
Royapettah, Chennai 600014.

**Printed by** :
A.Sheik Dawood, Dawood Graphics,
No.63,Muthu Mudali St, Royapettah, Chennai-600 014.

**Editor K.K.Ramesh**

# தலையங்கம்

அன்பு கொங்குச் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்,

தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

வருகின்ற 17–04–2024 புதன்கிழமை அன்று மாவீரன் தீரன் சின்னமலை பிறந்தநாளையொட்டி கிண்டி தொழிற்பேட்டையில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு சங்கத்தின் சார்பாக காலை 8.00 மணியளவில் மாலை அணிவித்து மரியாதை செய்ய உள்ளோம். இவ்விழாவில் நம் சொந்தங்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்நாள் முழுவதும் இலக்கியம், சமுதாயப்பணி என்று தன்னை அற்பணித்து வாழ்ந்து மற்றும் பண்பிற்கு உதராணமாக வாழ்ந்த உத்தமர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களுக்கு 6 ஆம் ஆண்டு நினைவு நாள் 06–04–2024 அன்று நாமக்கல் மாவட்டம், சிவியாம்பாளையத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம். அன்றே நமது சங்கத்தின் சார்பாக வெள்ளி விழா இல்லத்தில் சிலம்பொலியார் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

தமிழ் வருடப்பிறப்பு சித்திரை 1–ம் நாள் நிறைந்த வளம், நிறைந்த சந்தோஷம் மற்றும் வெற்றி இவற்றையெல்லாம் இந்த இனிய தமிழ் புத்தாண்டில் உங்கள் இல்லங்களிலும் தேடி வரவேண்டும் என்று தமிழ் முதற்கடவுள் இறைவனை பிரார்த்திக்கிறேன்.

கொங்கு வேளாளர்கவுண்டர்கள் பேரவையின் நிறுவனர் அமரர் கோவை செழியன் அவர்களது 24 ஆம் ஆண்டு நினைவு நாள் 14–03–2024 அன்று சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தில் அவரது படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் குடும்பவிழா சென்னை, தேனாம்பேட்டையில் அமைந்துள்ள காமராஜர் அரங்கத்தில் 28–07–2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை அன்று சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நமது கொங்கு சொந்தங்கள் சங்கமிக்கும் இந்த மாபெரும் திருவிழாவில் நமது உறவுகள் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு சங்கத்தின் சார்பாக அன்புடன் அழைக்கிறேன்.

மேலும், தாங்கள் சென்ற வருடம் சென்னை கொங்கு குடும்பவிழாவிற்கு மனமுவந்து கொடுத்த விளம்பர நன்கொடை விழா சிறப்பாக நடைபெற மிகவும் உதவிகரமாக இருந்தது. அதேபோல் இந்த வருடமும் தங்களுடைய நிறுவன விளம்பரங்களை தந்து ஊக்குவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

உலகத்தின் மிகப்பெரிய தேர்தலாம் இந்திய மக்களவை தேர்தல் இந்தியாவில் பலகட்டங்களாக நடைபெற உள்ளது. அதில் முதல் கட்டமாக தமிழகத்தில் வருகின்ற ஏப்ரல் மாதம் 19–04–2024 அன்று நடைபெற உள்ளது. நம் இந்திய திருநாட்டின் எதிர்காலத்திற்கு தீர்மானிக்கும் இந்த தேர்தலில் நாம் அனைவரும் வாக்களித்து சமுதாய கடமையாற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நம் கொங்கு இனத்தை சேர்ந்த பல வேட்பாளர்கள் இப்போட்டியிடுகிறார்கள். அனைவருக்கும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது கோடை காலம் என்பதால் வெப்பம் அதிகமாக உள்ளது. மேலும் மே மாதம் 4ம் தேதி தொடங்கி மே 29 வரை அக்னி நட்சத்திரம் என்பதால் மேலும் வெப்பம் அதிகரிக்கும். நம் கொங்கு சொந்தங்கள் அனைவரும் அதை எதிர்கொள்ளும் வகையில் இளநீர், மோர், நம்முன்னோர்கள் பயன்படுத்திய எளிய உணவுகளை அருந்தி உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி!



**கே.கே.ரமேஷ்**
தலைவர்
செல் : 98410 76117

# சென்னை கொங்கு குடும்பவிழா
## நன்கொடை வேண்டுதல் - 2024

நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் கடந்த 63 ஆண்டுகளாக பல்வேறுபணிகளையாற்றி வருகிறது. இந்த வருடம் நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் குடும்பவிழா சென்னை, தேனாம்பேட்டையில் அமைந்துள்ள காமராஜர் அரங்கத்தில் 28–07–2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நமது கொங்கு சொந்தங்கள் சங்கமிக்கும் இந்த மாபெரும் திருவிழாவில் நமது உறவுகள் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறுசங்கத்தின் சார்பாக அன்புடன் அழைக்கிறேன்.

மேலும், தாங்கள் சென்ற வருடம் சென்னை கொங்கு குடும்பவிழாவுக்கு மனமுவந்து கொடுத்த விளம்பர நன்கொடை விழா சிறப்பாக நடைபெறவும் நமக்கு சொந்தமான மூன்று கட்டிட பராமரிப்புக்கும் மற்றும் சமுதாய பணிக்காகவும் மிகவும் உதவிகரமாக இருந்தது. அதேபோல் இந்த வருடமும் தங்களுடைய நிறுவன விளம்பரங்களை தந்து ஊக்குவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மிக்க நன்றி

குறிப்பு : NEFT (or) RTGS முறையில் அனுப்ப கீழ்க்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் அனுப்பும் NEFT (or) RTGS விவரங்களை சங்கத்திற்கு உங்கள் நிறுவனத்தின் பெயரோடு கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**Bank Details :-**

| | |
|---|---|
| NAME | : KONGU NANBARGAL SANGAM |
| BANK | : Punjab National Bank |
| BRANCH | : KODAMBAKKAM |
| A/C NO | : 10852011000060. |
| IFSC | : PUNB0108510 |

மேற்குறிப்பிட்டுள்ள வங்கி கணக்கிற்கு நன்கொடையை அளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**கே.கே.ரமேஷ்**
தலைவர்
செல் : 98410 76117

**எம்.அமராபதி**
செயலாளர்
செல் : 94440 60885

**வி.ஆர்.பாலசுப்பிரமணியன்**
பொருளாளர்
செல் : 94444 04593

# 2024 சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சமுதாயப்பணியாற்றும் மற்றும் குடும்பவிழாவை சிறப்பாக நடத்தும் செயற்குழுவினர்கள்



திரு. K.K.ரமேஷ் B.E., M.B.A.,

திரு. M.அமராபதி B.B.A.,

திரு. V.R.பாலசுப்பிரமணியன் @ இசைபாலு B.Sc., B.L.,

திரு. M.பொன்னுசாமி

டத்தோ S.பிரகதீஷ்குமார்

திரு. K.சந்திரமோகன்

திரு. P.V.கல்யாணசுந்தரம்

திரு. C.கொங்குவேள்

*டாக்டர் S.ராஜாமணி

திரு. R.சண்முகவேல்

திரு. K.ஜெகதீசன்

திரு. S.சீனிவாசன்

திரு. K.K.முருகன்

திரு. V.K.செல்வக்குமார்

திரு. V.P.வீரப்பன்

திரு. K.நித்தியானந்தன்

திரு. D.S.சந்திரசேகர்

திரு. C.அரவிந்தன்

*விசா. M.சண்முகம்

திரு. S.ஜெகநாதன்

திரு. P.ரவி

*திரு. R.கந்தகார்த்திக்

*திரு. P.பிரேம்குமார்

*திருமதி சாந்தி சிவசண்முகம்

திரு. ஆர்.பாலசந்திரன்

# கொங்கு மங்கையின் கலைவிழா
# பரதநாட்டிய அரங்கேற்ற விழா

## செல்வி : அ.தேஜஸ்வி

### நமது முன்னாள் செயற்குழு உறுப்பினர் திருமதி அ.சரிதா – திரு. அ.அன்பழகன்
### சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் வாழ்த்துக்கள்





கண் கொடுத்தோர் கடவுள் ஆனார்!
உதிரம் கொடுத்தோர் உத்தமர் ஆனார்!
மரம் வளர்த்தோர் மனிதர் ஆனார்!
கலை வளர்த்தோர் காவியம் ஆனார்.

– தெய்வத்திரு.ஜெய.சுந்தரமூர்த்தி

நமது முன்னாள் செயற்குழு உறுப்பினர் திரு.அ.அன்பழகன் – திருமதி அ.சரிதா அவர்களின் புதல்வி அ.தேஜஸ்வி வேலம்மாள் அனெக்ஷர், கீழ் அயனம்பாக்கம் பள்ளியில் பதினொன்றாம் வகுப்பு பயில்கிறார். தன் பரதக்கலையை கடந்த பத்து வருடங்களாக, கரு.சுமதி சுந்தர் அவர்களிடம் பயின்று 2017–ம் ஆண்டு சலங்கை பூஜையை முடித்துள்ளார். தமிழக ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் பங்கு கொண்டு தமிழக ஆளுநர் முன்பு பரதநாட்டியம் ஆடியுள்ளார். திருமலை திருப்பதியில், நாதநீராஞ்சனம், திருஅதிகை, திருவையாறு, வேலூர் ஸ்ரீ புரம், திருக்கழுகுன்றம், மயிலை கபாலீஸ்வரர் கோவில் போன்ற புராதன கோவில் பலவற்றிலும் நடனமாடி உள்ளார், ‘‘திருஅதிகை நாட்டிய நர்த்தகி’’ என்கிற பட்டம் பெற்றுள்ளார்.

# கொங்கு சொந்தங்களே செயல்படுங்கள்

செயல்பட்டுக் கொண்டே இருங்கள், சிந்தனையும் அறிவும் முக்கியம் தான் என்றாலும், அறிவு செயலாக மாறும் பொழுதுதான் வெற்றிக் கனிகளை நம்மால் சுவைக்க முடியும், சிந்தித்துப் போதும் செயல்படு என்றார்.

பேராசிரியர் இல. சே. கந்தசாமி சிறகை விரி பிறகு சிரி என்கிறது ஒரு கவிதை. ஆகவே, கனவு காண்பதில் தவறில்லை. செயலில் இறங்காமல் கனவு கண்டுக் கொண்டே இருப்பது தான் தவறு, அறியாமையில் இருப்பவர்களைவிட அறிந்தும் செயல்படாமல் இருப்பவர்களே அதிகம். உழைத்தால் தான் உயர முடியும் என்பதை அறிந்திருந்தும். உழைக்காமல் சோம்பி கிடப்பவர்களைப் பற்றி என்ன சொல்வது. மேலும், நீச்சல் தெரியாமல் தண்ணீரில் மூழ்கி போவர்களைவிட, நீச்சல் தெரிந்தும் நீந்துவதற்கு மனமின்றி மூழ்கிப் போவர்களை என்னவென்று சொல்வது, ஆம், இளமையில் வேர்வை சிந்த விட்டால் முதுமையில் கண்ணீர் சிந்த வேண்டும். சிலர் சும்மா இருப்பதே சுகம் என்றிப்பார்கள். சும்மா இருப்பதால் உடலும், மனமும் பாதிக்கப்படுகிறது. பிடித்த வேலைக் கிடைக்க வில்லை என்றால், கிடைத்த வேலையைப் பிடித்த வேலையாக மாற்றிக்கொண்டு செயல்படுங்கள். இதுதான் வெற்றிக்கு எளிய வழிபிறக்கும். பிறக்கும் போதுதான் மின்மினிகள் ஜொலிக்கின்றன. அதுபோல, உழைக்கும் பொழுது தான் மனிதர்கள் ஜொலிக்கிறார்கள். பறக்கப் பறக்க சிறகுகள் பலப்படும் என்று சொல்வார்கள். ஆகவே, செயல்பட்டுக் கொண்டு இருங்கள். உங்கள் மூச்சு உள்ளவரை அதுதான் வெற்றிக்கும். மகிழ்ச்சிக்கும் எளிய வழி உலகத்திலேயே சிறந்த சொல் செயல் என்பார்கள். செயல்படுபவர்கள் சிகரத்தை அடைகிறார்கள். வெறுமனே இருப்பவர்கள் சோகத்தில் மூழ்கி போவார்கள். எனவே, எப்போதும் செயல்பட்டுக் கொண்டே இருங்கள்.






# வைட்டமின் டி குறைப்பாட்டை தவிர்க்க

பத்மஸ்ரீ கொங்குமாமணி **டாக்டர் வி.எஸ். நடராஜன்**
முதியோர் நல மருத்துவர், சென்னை

**"சூரியன் இல்லாத இடத்திற்கு வைத்தியர் வருவார்" – பழமொழி**

எல்லாப் பருவத்திலும் எல்லா வைட்டமின்களும் அவசியம் என்றாலும் குழந்தைப் பருவத்திலும், முதுமையிலும் மிகவும் அவசியமானது வைட்டமின் டி ஆகும். இது எலும்பை உறுதி செய்ய மிகவும் உதவும். இந்த வைட்டமின் குறைவால் குழந்தைகளுக்கு ரிக்கெட்ஸ் (Rickets) என்ற நோயும், முதியவர்களுக்கு எலும்பு வலிமை இழத்தல் (Osteoporosis) என்ற தொல்லையும் ஏற்படும்.

நமது உடல் சூரிய ஒளியில் படும்பொழுது தோலுக்கு அடியில் உள்ள ஒரு வகைக் கொழுப்பிலிருந்து வைட்டமின் டி கிடைக்கிறது. சிறுகுடலில் இருந்து கால்சியம் தாதுப்பொருளை உறிஞ்சி இரத்தத்திற்கு அனுப்பி வைப்பதற்கு வைட்டமின் டி தேவைப்படுகிறது. இதனால் எலும்பு வலிமை பெறுகின்றது. வைட்டமின் டி நமக்குக் கிடைப்பதற்கு எவ்வளவு நேரம் நம் உடல் வெயி–லில் பட வேண்டும் என்பது முக்கியம். தினமும் சுமார் 30–60 நிமிடங்கள் வெயிலில் இருந்தால் போதும்

**வைட்டமின் டி குறையக் காரணங்கள்:**

- சூரிய ஒளி அதிகம் படாமல் இருப்பது
- வீட்டிலேயே முடங்கிக் கிடப்பது
- முதியோர் இல்லங்களில் தொடர்ந்து வசிப்பது
- நோய் காரணமாக நீண்ட நாட்களாக படுக்கையிலேயே படுத்திருப்பது
- சத்துள்ள உணவு குறைவாக உண்பது

- ❖ செரிமானக் குறைபாடு
- ❖ கல்லிரல் மற்றும் சிறுநீரக நோய் பாதிப்பு
- ❖ தொடர்ந்து வலிப்பு நோய்க்கு மாத்திரை எடுத்துக் கொள்வது

**தொல்லைகள்**

- ❖ சதைப் பிடிப்பு, உடல் வலி
- ❖ உடல் பலவீனம்
- ❖ அடிக்கடி கீழே விழுதல்
- ❖ மூட்டு வலி
- ❖ எலும்பு முறிவு
- ❖ இருதய நோய், மறதி நோய் மற்றும் புற்றுநோய் போன்றவைகள் வர வாய்ப்பு அதிகம் உண்டு.

***கண்டறிதல் :*** இரத்தப் பரிசோதனை மூலம் வைட்டமின் டி எந்த அளவு உள்ளது என்ற தெரிந்து கொண்டு அதற்கு தக்கபடி சிகிச்சை பெறலாம்.

**இரத்தத்தில் வைட்டமின் டி அளவு**

| | |
|---|---|
| மிகக் குறைவு | – 0 – 10 த்திற்கு கீழே |
| குறைவு | – 10 – 20 |
| சற்றே குறைவு | – 20 – 30 |
| சரியான அளவு | – 30 க்கு மேல் |

மருத்துவரின் ஆலோசனைப்படி வைட்டமின் டி 2000 யூனிட் மாத்திரையை தினமும் அல்லது 60,000 யூனிட் மாத்திரையை வாரம் ஒரு முறை 2 – 3 மாதங்கள் தொடர்ந்து சாப்பிட வேண்டும்.

***வைட்டமின் டி குறைப்பாட்டைத் தவிர்க்க:***

- ❖ தினமும் குறைந்தது 30 – 60 நிமிடமாவது வெயில் படுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்
- ❖ தினமும் ஒரு கப் பால் அவசியம்
- ❖ சைவ உணவுகளில் பால், தயிர், வெண்ணெய் மற்றும் பால் பொருட்களை சற்று அதிகம் எடுத்துக்கொள்ளவும். தானிய வகைகளை (ராகி, கம்பு சோளம், வரகு, தினை) உணவில் சற்று அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். மீன், மீன் எண்ணெய் (காட்லீவர் எண்ணெய்), முட்டையின் மஞ்சள் கரு, ஈரல், காளான் முதலியவற்றை முடிந்தளவிற்கு சேர்த்துக் கொள்ளவும்.
- ❖ கால்சியம் அதிகம் உள்ள உணவு தினமும் அவசியம் தேவை. மருத்துவரின் ஆலோசனைப்படி கால்சியம் மாத்திரையை எடுத்துக் கொள்ளலாம்
- ❖ தினமும் சூரிய ஒளியில் நடப்போம் உடல் எலும்பை உறுதி பெறச் செய்வோம்.

# 2024 ஆம் ஆண்டுக்கான

- ‘கொங்கு சாதனையாளர்’ விருது,
- ‘வெளிநாடு கொங்கு சாதனையாளர்’ விருது,
- ‘கொங்கு பெண் சாதனையாளர்’ விருது,
- ‘கொங்கு வேளாண் சாதனையாளர்’ விருது,
- ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது,



நமது சங்கத்தின் சார்பில் சென்னையில் இந்த ஆண்டு நடைபெற உள்ள குடும்பவிழாவில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து, சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமை தேடித் தந்துள்ள சாதனையாளர்களுக்கு “கொங்கு சாதனையாளர்” விருதும், வெளிநாடு சென்று சாதனை படைத்துள்ளவர்கட்கு “வெளிநாடு கொங்கு சாதனையாளர்” விருதும், நமது சமுதாய மகளிர் அவர்களது துறையில் சாதனை புரிந்தமைக்கான “கொங்கு பெண் சாதனையாளர்” விருதும், வேளாண்மையில் சாதனை படைத்துள்ளவர்கட்கு “கொங்கு வேளாண் சாதனையாளர்” விருதும், தேர்வுகளில் போற்றிப் பாராட்டத்தக்க வகையில் சாதனை படைத்துள்ள மாணவ, மாணவிகளுக்கு “கொங்கு இளம் சாதனையாளர்” விருதும் வழங்கப்பட உள்ளன.

இந்த ஆண்டு குடும்ப விழா 28–07–2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை மிகச்சிறப்பாக பார்போற்றும் வண்ணம் நடைபெற உள்ளது. 2024 ஆம் ஆண்டிற்கான மேற்கண்ட விருதுகளை வழங்குவதற்குப் பரிசீலனை செய்திட, தங்களுக்குத் தெரிந்த, தங்கள் பகுதியைச் சார்ந்த தகுதிவாய்ந்த சாதனையாளர்களின் விவரங்களைப் புகைப்படத்துடன் சங்க அலுவலகத்திற்கு ஜூன் 1–ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு சங்க உறுப்பினர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

\- சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்



# குடும்ப விழா மலர்

## 2024

## விளம்பர வேண்டுகோள்

அன்புடையீர், வணக்கம்

நமது சங்கம் சென்னையில் கடந்த 63 ஆண்டுகளாகப் பல்வேறு சமுதாயப் பணிகளை ஆற்றி வருகிறது. குறிப்பாக, கொங்கு நாடு இல்லம், வெள்ளி விழா இல்லம் ஆகியவை, சென்னை வரும் நம் நம் உறவினர்கள் தங்கிச்செல்லவும், தங்கள் மேற்படிப்பு, பயிற்சிகளுக்காகச் சென்னை வரும் மாணவ, மாணவிகள் தங்கி இருக்கவும் பெரிதும் பயன்பட்டுவருகின்றன. மேலும் சென்னை பீட்டர்ஸ் சாலையில் அமைந்துள்ள தீரன் சின்னமலை மாளிகை, சென்னை வரும் நமது கொங்குச் சொந்தங்கள் நவீன வசதிகளுடன் தங்கிச்செல்லப் பயன்பட்டு வருகிறது. அவ்வப்போது இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் நமது சமுதாயத்தில் உன்னதமான பணிகளை ஆற்றிவருபவர்களுக்குக் 'கொங்குமாமணி' விருது, பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்கு துறை சார்ந்த விருதும் 'கொங்கு சாதனையாளர்' விருது, இளைஞர்களுக்கு 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது, 'வெளிநாடு கொங்கு சாதனையாளர்' விருது, 'கொங்கு பெண் சாதனையாளர்' விருது மற்றும் 'கொங்கு வேளாண் சாதனையாளர் விருது' ஆகிய விருதுகளை ஆண்டுதோறும் சங்கம் வழங்கி கொங்கு மக்களை கௌரவிக்கப்படுகிறது.

2024 ஆம் ஆண்டு விருதுகளுக்காகத் தேர்வு செய்யப்படவுள்ள கொங்கு சாதனையாளர்கள் ஆற்றிய அரும்பணிகளைத் தொகுத்து 28-07-2024 அன்று நடக்கவிருக்கும் குடும்ப விழாவில் சிறப்பு மலர் ஒன்றை வெளியிட இருக்கிறோம். இந்தச் சிறப்பு விழா மலரில் நமது சமுதாயத்தினர் பலரும் நடத்தி வரும் தொழில், வியாபாரம், மருத்துவமனைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் பற்றிய விவரங்களை வெளியிடுவதால், உலகளாவிய அளவில் அனைவரும் அறியும் அரிய வாய்ப்புக் கிடைக்கும்.

தாங்கள் இப்பெரும் முயற்சிக்கு உதவும் வகையில் இத்துடன் இணைத்துள்ள விளம்பர வேண்டுகோளைப் பூர்த்தி செய்து, தங்கள் நிறுவனத்தின் விளம்பரத்தையும், அத்துடன் கொங்கு நண்பர்கள் சங்கம் (Kongu Nanbargal Sangam) என்ற பெயருக்கு வரைவோலை / காசோலையையும், 01-07-2024 தேதிக்குள் வந்துசேருமாறு அனுப்பி வைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் தங்கள் நிறுவனத்தின் விளம்பரத்தினை PDF (or) JPEG பார்மேட்டில் கொடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| மலர்க்குழுத் தலைவர் | : | திரு. **செ.கொங்குவேள்** | - 98408 90034 |
| மலர்க்குழு உறுப்பினர்கள் | : | திரு. **வி.பி.வீரப்பன்** | - 94432 66610 |
| | | திரு. **கே.ஜெகதீசன்** | - 91767 17131 |
| | | திரு. **சீனிவாசன்** | - 94440 18021 |
| | | திரு. **கே.கே.முருகன்** | - 98400 56487 |
| | | திரு. **ஆர்.சண்முகவேல்** | - 98410 22690 |
| | | திரு. **எஸ்.ஜெகன்நாதன்** | - 94437 42696 |

**மற்றும் அனைத்து செயற்குழு உறுப்பினர்கள்**

- சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

# குடும்ப விழாச் சிறப்பு மலர்
## 2024

பெறுநர்
**குடும்ப விழா மலர்க்குழு**
**கொங்கு நண்பர்கள் சங்கம்,**
"வெள்ளி விழா இல்லம்"
**34,** சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
Ph : 044-43510460, Cell : 63839 85919

அன்புடையீர், வணக்கம்

குறிப்பிட்டுள்ள விளம்பர விவரத்தை 2024 ஆம் ஆண்டுக் குடும்ப விழாச் சிறப்பு மலரில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். விளம்பர விவரத்தை இத்துடன் இணைத்துள்ளோம்.

| | | Advt. Size : 210x150 mm | | |
|---|---|---|---|---|
| பின்பக்கம் | (வண்ணத்தில்) | | ரூ.1,25,000 | ☐ |
| முன் அட்டை (உள்பகுதி) | (வண்ணத்தில்) | | ரூ.1,00,000 | ☐ |
| பின் அட்டை (உள்பகுதி) | (வண்ணத்தில்) | | ரூ.1,00,000 | ☐ |
| முழுப் பக்கம் ஆர்ட் பேப்பர் | (வண்ணத்தில்) | | ரூ.25,000 | ☐ |
| முழுப் பக்கம் | (கருப்பு வெள்ளை) | | ரூ.10,000 | ☐ |
| அரைப் பக்கம் | (கருப்பு வெள்ளை) | | ரூ.5,000 | ☐ |
| Stall | (Size 3x5) | | ரூ.5,000 | ☐ |

Advertisement Format PDF (or) JPEG

விளம்பரத்திற்குண்டான தொகை ரூ.................................... ஆன காசோலை / வரைவோலை எண்........................... தேதி......................... வங்கியில் எடுத்து இத்துடன் இணைத்துள்ளோம்.

அனுப்புநர்

குறிப்பு : NEFT (or) RTGS முறையில் அனுப்ப கீழ்க்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் அனுப்பும் NEFT (or) RTGS விவரங்களை சங்கத்திற்கு உங்கள் நிறுவனத்தின் பெயரோடு கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**Bank Details :-**

NAME : KONGU NANBARGAL SANGAM
BANK : Punjab National Bank
BRANCH : KODAMBAKKAM
A/C NO : 10852011000060.
IFSC : PUNB0108510

.............................................
கையொப்பம்

* 80 G Exemption available

# கொங்கு வேளாளர் காளமங்கலம்
# கண்ணகுல
# அருள்மிகு குலவிளக்கம்மன்

## குலவிளக்கு அம்மன் துதி

ஆதிபராசக்தியென நின்றாய் நீயே
அனைத்துயிர்கள் அண்மெலாம் ஈன்றாய் நீயே
சோதிவளர் மணிமகுடம் தரித்தாய் நீயே
சொல்லரிய சக்தியெலாம் பூண்டாய் நீயே
பாதி சிவன் பாகத்தைக் கொண்டாய் நீயே
பக்தி செயும் அடியர் துயர் கெடுப்பாய் நீயே
காதலறம் வீரமெலாம் வளர்ப்பாய் நீயே
கண்ணகுல விளக்காகக் காக்கும் தாயே

கொங்கு நாட்டில் குடியேறிய கொங்கு வேளாளர்கள் காலச் சூழலால் கொங்கு நாட்டில் பல இடங்களில் குடியேறினர். அவ்வாறு குடியேறிய மக்கள் தங்கள் காவல் தெய்வமாகிய காளியைத் தாய்த்தெய்வத்தை தங்கள் வசதிக்கேற்றவாறு பெயர் சூட்டி வழிபட்டு வந்தனர். காளமங்கல குலவினக்கு அம்மன் கோயில் கண்ணன்குலத்தாருக்கு மட்டுமே காணி உரிமை கொண்ட கோயிலாகும்.

கண்ணகுல தெய்வமெனக் காவிரியின் தன்மருங்கில்
நின்றருளும் கீர்த்திமிகும் அன்னைநினை – இன்பமுடன்
நான்பாட நால்வாயான் துங்கக் கரிவதனத்
தான் செய்ய தாள் மலரே காப்பு.

ம.ப.பெரியசாமி தூரன்
செந்தமிழ் செல்வர்

– நன்றி
சாரதாமணி சின்னசாமி





கொங்கு வேளாளர் காளமங்கலம்
கண்ணகுல

# அருள்மிகு குலவிளக்கம்மன்

# தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன்

## 6-ஆம் ஆண்டு நினைவு நாள்






வாழ்நாள் முழுவதும் இலக்கியம், சமுதாயப்பணி என்று தன்னை அற்பணித்து வாழ்ந்து மற்றும் பண்பிற்கு உதராணமாக வாழ்ந்த உத்தமர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களுக்கு 6 ஆம் ஆண்டு நினைவு நாள் 06–04–2024 அன்று நாமக்கல் மாவட்டம், சிவியாம்பாளையத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம்.



# மணமகள் தேவை



| | | |
|---|---|---|
| ஜாதகர் பெயர்/உயரம் | : | அபிஷேக் செந்தில்குமார் |
| பிறந்த தேதி | : | 17-06-1996 |
| பிறந்த நேரம், இடம் | : | 07:05 am, கரூர் |
| நட்சத்திரம் / இராசி | : | திருவாதிரை 3 / மிதுனம் |
| தந்தை பெயர் | : | டாக்டர் M.செந்தில்குமார் Ph.D., |
| தாயார் பெயர் | : | திருமதி S.மகேஷ்வரி |
| குலம் | : | செங்கணி |
| உடன் பிறந்தோர் | : | இல்லை |
| உயரம் | : | 5.10 |
| படிப்பு | : | B.E., MS., (Singapore) |
| தொழில் | : | Own Business (Senthil Safety Solutions Pvt. Ltd.), Chennai / Karur |
| மாத வருமானம் | : | Rs.2,00,000/- per month |
| சொத்து மதிப்பு | : | 80 கோடி |
| உகந்த மணமகள் | : | நேரில் |
| ஜாதக குறிப்பு | : | சுத்த ஜாதகம் (பரிகார செவ்வாய்–பொருந்தும்) |
| தொடர்புக்கு | : | 98436 76333 |

| | | | |
|---|---|---|---|
| சனி கேது | | செவ், புத சுக் | சூரி சந், லக் |
| | இராசி | | |
| | | | |
| குரு | | மாந் | ராகு |

| | | | |
|---|---|---|---|
| செவ் லக் | புத | | ராகு |
| சந் மாந் | நவாம்சம் | | சுக் |
| | | | |
| கேது | | சூரி குரு சனி | |

# தேர்தல் நாள்

**19 ஏப்ரல் 2024**

## நமது கொங்கு நெஞ்சங்களே தவறாமல் வாக்களிப்பது வாக்காளர்களின் கடமை!

## அனைவரும் தவறாமல்



## வாக்களிப்போம்

உலகத்தின் மிகப்பெரிய தேர்தலாம் இந்திய மக்களவை தேர்தல் இந்தியாவில் பலகட்டங்களாக நடைபெற உள்ளது. அதில் முதல் கட்டமாக தமிழகத்தில் வருகின்ற ஏப்ரல் மாதம் 19–04–2024 அன்று நடைபெற உள்ளது. நம் இந்திய திருநாட்டின் எதிர்காலத்திற்கு தீர்மானிக்கும் இந்த தேர்தலில் நாம் அனைவரும் வாக்களித்து சமுதாய கடமையாற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நம் கொங்கு இனத்தை சேர்ந்த பல வேட்பாளர்கள் இப்போட்டியிடுகிறார்கள். அனைவருக்கும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.



# நமது கொங்கு நாட்டுக்கு...

தமிழகத்தில் உள்ள அனைத்து இயற்கை ஆர்வலர்கள், பசுமை விரும்பிகள், மரங்கள் மீது,மண்ணின் மீது எதிர்காலத்தில் வரும் பருவநிலை மாற்றத்தால் வெயில், வெப்பம் அதிகரிப்பதை தடுக்க நினைப்பவர்கள், இப்போ பலரும் உணர்வது ,அனுபவிப்பது,தெரியும் நாம் கட்டிய வீட்ல கூட குடியிருக்க இயலவில்லை வெயில் சுடுவதால்,இரவில் தூங்க முடிவதில்லை ஒருநாளைக்கு மூன்று நான்கு முறை குளிப்பது, இரவில் வெக்கை என அனுபவித்து வருகிறோம், ஆகவே அதிகமா மரங்களை நடுவோம், வெப்பத்தை குறைப்போம், ஒவ்வொரு ஊரிலும் பஞ்சாயத்தில் உள்ளவர்கள் ஊருக்கு பத்தாயிரம் மரங்களை நட்டு வளர்த்தால் போதும், இதை கேளி கிண்டல் நக்கல் நையாண்டி என நினைக்காம மரங்களின் அவசியத்தை உணர்வோம், இன்னும் பத்து வருடத்தில் வெயில் இப்போ உள்ள அளவை விட ஒரு மடங்கு அதிகரிக்கும் அப்போ நம்மால் தாங்க இயலாது குழந்தைகள் காப்பாற்றுவதற்கு சிரமம் இந்த வருடமே ஒவ்வொரு ஊரிலும் வெயிலால் கோடை கொப்பலம் வந்துள்ளது என மருத்துவ ஆய்வுகள் சொல்கிறது, நம்ம வீட்டை சுற்றி இடமிருப்பின் முடிந்த அளவிற்கு மரங்களை நடுங்கள்,

**மரம் நடுவோம் இயற்கையை காப்போம்**

வரும் ஆவணி மாதம் மழை காலம் துவங்கும். அப்போது தமிழகத்தில் 10 கோடி மர கன்றுகள் நட இப்போதே திட்டமிடுவோம் மர கன்றுகள் உற்பத்தியாளர்கள், வன துறை, பள்ளி தாளாளர்கள், உயர் பதவிகளில் இருப்போர், பிரபலங்கள், ஆன்மீக தலைவர்கள், அனைத்து மதங்களின் குருமார்கள், கிராம தலைவர்கள், ஊர் தலைவர்கள், அனைத்து கட்சி தலைவர்கள் ஒன்று கூடி செயல்படுவோம்.

**அதற்கு இப்போதிருந்தே தயார் ஆகி கொள்ளுங்கள். உங்களுக்கான ஒரு குழுவை இப்போதே உருவாக்கி கொள்ளுங்கள்**

1 கோடி குடும்பமும் தலா 10 மர கன்றுகள் நட்டு சாதிக்க முடியும். ஒவ்வொரு மர கன்றிற்கும் அடுத்த 1 வருடம் தினமும் 1 லிட்டர் நீர் விட்டால் போதும். இதே போல் சில வருடங்கள் செய்தால், 2030 கதுள் தமிழகமும் குளிர்ந்து போகும்

அவரவர் ஊர்களில் சிறு சிறு குழுக்களாக இன்றே ஆயத்தம் ஆகுங்கள். கிராமங்களில் இன்னும் அதிக மர கன்றுகள் நடுவதற்கு திட்டமிடுங்கள். இதற்கான வாட்ஸ்அப் குழுக்கள் அந்தந்த ஊர்களில், கிராமங்களில் இன்றே துவங்குங்கள். மர கன்றுகள் நடுங்கள் அல்லது மர கன்றுகள் வாங்கி கொடுங்கள் அல்லது மர கன்றுகள் நட உதவுங்கள். மர கன்றுகள் தேவைக்கு உங்களுக்கு அருகில் உள்ள நாற்று பண்ணைகளில், நர்சரிகளில் இப்போதே முன் பதிவு செய்யுங்கள்

**பொது இடங்களில் :** 1,புங்கன் மரம் 2,வெப்ப மரம் 3,ஆவி மரம் 4,அரச மரம் 5,குருவி பழம் என்ற சர்க்கரை பழம், லட்டு பழம் இவைகளை வளர்ந்த கன்றுகளாக பார்த்து வாங்கி நடுவது நன்று. இதில் புங்கன் மரத்தை ஆடு மாடுகள் கடிக்காது

**நீர் வழி தடங்கள் அருகில் :** 1,பூவரசு மரம், 2,பனை மரம்

**பாதுகாப்பு உள்ள வீட்டு அருகில் உள்ள இடங்களில் அவரவர் விருப்ப மர கன்றுகள் நடலாம்.**

1,கறிவேப்பிலை, 2,லட்ச கொட்டை கீரை, 3,தேக்கு, 4,நாட்டு மா மரம், 5,நாட்டு பலா, 6,நாட்டு அத்தி , 7,குமிழ் 8,மகா கனி, 9,மலை வேம்பு போன்ற மரங்கள் நடலாம்

**வழிபாட்டு தலங்கள் –**

1,மர மல்லி, 2,மகிழம் மரம், 3,மனோரஞ்சிதம், 4,பாரிஜாதம், 5,புன்னை மரம், 6,செண்பக மரம், 7,மருதாணி போன்றவற்றை நடலாம் 2030 இல் பச்சை பசேல் என்ற தமிழகம் உருவாக்குவோம். இனி வரும் காலங்களில் உண்டாக இருக்கும் கோடை கால கடும் சூரிய வெப்ப அலைகளில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்வோம். மக்களிடம் எடுத்து சொல்லுங்கள். விழிப்புணர்வு செய்யுங்கள். மர கன்றுகள் நடுவதற்கு ஆவணி மாதத்தில் முதல் மழை பெய்ததும் 1 நாள் பொது விடுமுறை அறிவிக்க வேண்டுகிறோம். வெப்ப அலைகளுக்கேதிரான ஒரு போர் போல் தான் இதுவும், ஒன்றுபட்டு வென்று காட்டுவோம்,

ன்றே செய்வோம் அதனை இன்றே துவங்குவோம், பிடித்திருந்தால் காப்பி செய்து பதிவிட்டு இயற்கையை காக்க உதவுங்கள்...

## மணமகள் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம் /நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 84 | R.பிரவீன் | பெருங்குடி | 05-09-1994 பூரம் | B.E., (ECE) | Artificial Intelligence | நாமக்கல் 5.45 pm | 95000 93377 |
| 85 | K.ஷியாம் சுந்தர் | ஓதாளன் | 25-05-1992 பூரட்டாதி | B.E., (Mech) | Deputy Manager (MNC), Chennai | கோவை 11.15 pm | 86678 27270 |

## மணமகன் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம் /நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 93 | T.S.சுகன்யா | பெரியகுலம் | 08-07-1993 சதயம் | B.E., LLB | Studying | கோவை 12.07 pm | 98422 36222 94879 83622 |

## திருத்தம்

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம் /நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 83 | V.பிரவீன்குமரன் | பெரியகுலம் | 13-03-1998 உத்திரம் | B.E., M.Sc., (UK) | Data Scientist (UK) | சென்னை 7.57 pm | 94444 15299 94448 59959 |

# வாழ்த்துகிறோம்




## ஹிந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி
## திருமதி. சரஸ்வதி கண்ணையன்
# சிந்தனை கவிஞர் கவிதாசனின்

"வெற்றி மொழிகள் 100"நூல் வெளியீட்டு விழா கோவை ஹிந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது.

கோயம்புத்தூர். மார்ச் 12, 2034 : கோவை ஹிந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியில் இன்று சிந்தனை கவிஞர் கவிதாசனின் வெற்றி மொழிகள் 100 என்ற நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது

விழாவிற்கு வந்திருந்தவர்களை ஹிந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்துறை தலைவர் முனைவர் ச. ஆ. காயத்ரி வரவேற்றார். நூலினை பெற்றுக்கொண்ட திருமதி. சரஸ்வதி கண்ணையன் பேசும் போது தித்திக்கும் மொழி இது. திறன் பேசும் மொழி இது, உரக்கச் சொல்லும் மொழி இது. உயர்ந்து நிற்கும் மொழி இது. இப்படிப்பட்ட தமிழ் மொழியில் நமக்கு கவிதைகளை கொடுத்துக் கொண்டிருக்கும் கவிதாசனின் சிறப்பு மிகவும் பெருமைக்குரியது. வீரபாண்டிய கட்டபொம்மன் தனது வீரத்தை போரில் சொன்னான், விவசாயி தன் பெருமையை வியர்வையில் சொன்னான், கவிதாசன் தன் திறமையை கவிதையில் சொல்கிறார். இவரின் கவிதை 100 ஆண்டுகளையும் தாண்டி அடுத்த தலைமுறையை சென்றடைய வேண்டும். இவர் கோவையில் பிறந்தது மிகவும் பெருமைக்குரியதாக உள்ளது. விஜயா

பதிப்பக நிறுவனர் திரு வேலாயுதம் படிக்காத ஒருவர். இவர் தனது 82 வயதில் 70 ஆண்டுகளாக புத்தக கண்காட்சியை நடத்தி வருகிறார் என்பது கோவைக்கு பெருமையாகும். இவர் மட்டும் இல்லை என்றால் கோவைக்கு புத்தகம் இருக்காது, மாணவர்களுக்கு படிக்க புத்தகமும் இருக்காது இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் வாழ்த்துரை வழங்கிய விஜயா பதிப்பக நிறுவனர் திரு மு வேலாயுதம் அவர்கள் பேசும் போது எனக்கு மாணவர்களை பார்த்தால் ஒரு கிக் வந்துவிடும். மாணவர்களை பார்க்கும்போது எனக்கு பரவசமாக உள்ளது. கவிதாசன் மாணவருடன் உள்அன்போடு இருக்கிறார். இவருக்கு மாணவர்கள் மட்டுமல்லாது, வயதானவர்களும் கூட கவிதாசனின் கவிதையே ரசிக்கின்றார்கள். கவிதாசனின் எழுத்துக்கள் சமூக மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்று அவர் பேசினார்.

ஹிந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் ஏ பொன்னுசாமி பேசும்போது இங்கு இந்த புத்தகம் வெளியிடுவது மகிழ்ச்சி அளிக்கிறது. இன்று வெளியிடும் இந்த புத்தகமானது 76 வது புத்தகமாகும். கவிதாசனின் நூறாவது புத்தகமும் இங்கே வெளியிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுகின்றேன் இவ்வாறு அவர் பேசினார். விழாவில் ஏற்புறையேற்று சிந்தனை கவிஞர் கவிதாசன் பேசும் போது – கை தட்டுதலின் ரகசியம் வெற்றியாகும், வெற்றியின் ரகசியம் உழைப்பாகும். ஜெர்மனியில் கடந்த 30 ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து கைதட்டுவதால் மாரடைப்பு நோய் வராது என்று கண்டுபிடித்து உள்ளார்கள். விஜயா பதிப்பகம் ஏற்கனவே வெளியிட்ட எனது தன்னம்பிக்கை மொழிகள் 100 என்ற புத்தகம் லட்சம் பிரதிகளை தாண்டி விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. விஜயா பதிப்பகம் திரு வேலாயுதம் அவர்கள் இல்லை என்றால் நான் இல்லை. நான் முதலில் 82–ம் வருடம் கவிதா என்ற பெயரில் கவிதை எழுதி ஆனந்த விகடன் பொன்விழா மலருக்கு அனுப்பி வைத்தேன் அது பிரசுரமாகியது.

இரவிலே வாங்கினோம் இன்னும் விடியவே இல்லை தலைப்பு சுதந்திரம், என்ற கவிதைக்கு மறுப்பு கவிதையாக இரவிலே வாங்கினோம் இன்னும் விடியவே இல்லை என்பதெல்லாம் பொய் விடிந்து வெகு நேரம் ஆகியும் நீதான் இன்னும் சுதந்திரமாக தூங்கிக் கொண்டிருக்கிறாய். விழித்தால் தானே வெளிச்சம் தெரியும் எழுக இளைஞனே என்று மாற்றி எழுதினேன். விடியல் என்பது வெளியே இல்லை உன் விழியில் தான் உள்ளது என்றும் எழுதினேன். இதற்கு ஆனந்த விகடன் பதிப்பகத்தில் ஐம்பது ரூபாய் சன்மானமாக கிடைத்தது பெருமையாக உள்ளது. ஒவ்வொரு மாணவ மாணவர்களிடமும் கவிதை எழுதும் திறன் உள்ளது. நீங்கள் முயற்சிப்பது இல்லை. முயற்சித்தால் நீங்களும் கவிஞர்கள் தான். உயரம் என்றால் எவரெஸ்ட், உயர வேண்டும் என்றால் நெவர் ரெஸ்ட் என்ற கருத்தினை மாணவர்கள் மனதில் பதிய வைத்தார். இவ்வாறு அவர் பேசினார்.

கோவை ஹிந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற சிந்தனை கவிஞர் கவிதாசன் அவர்களின் வெற்றி மொழிகள் 100 புத்தக வெளியீட்டு விழாவில் புத்தகத்தை வெளியிடுகிறார் கல்லூரியின் செயலாளர் சரஸ்வதி கண்ணையன் உடன் கல்லூரி முதல்வர் பொன்னுசாமி, தமிழ் துறை தலைவர் காயத்ரி. விஜயா பதிப்பகம் வேலாயுதம், கோவை புத்தக கண்ணாக்ட்சி தலைவர் ரமேஷ் கிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்.

# கனவு நினைவானது!

## பத்மஸ்ரீ கொங்குமாமணி டாக்டர் வி.எஸ்.நடராஜன்
## முதியோர் நல மருத்துவர், சென்னை




நான் 1974–78 ல் லண்டனில் முதியோர் மருத்துவத்தில் சிறப்புப் பயிற்சியும் பட்டமும் பெற்று தாயகம் வந்து சென்னை அரசு பொது மருத்துவமனையில் 1978 ஆம் ஆண்டு முதியோர்களுக்காக புறநோயாளி பிரிவையும் 1988 ஆம் ஆண்டு 10 படுக்கைகள் கொண்ட உள்நோயாளிகள் பிரிவும் தொடங்கப்பட்டது. இந்தியாவிலேயே இதுதான் முதன் முதலாக முதியவர்களுக்கு ஆரம்பிக்கப்பட்ட வார்டாகும். அப்பொழுது முதியோர் மருத்துவத்தின் பிறப்பிடமான தமிழகத்தில் ஒரு தேசிய முதியோர் நல மையம் அமைக்க வேண்டி, மத்திய அரசுக்கு கோரிக்கையை விடுத்தேன். அக்கோரிக்கை சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக, மேலே போவதும் கீழே வருவதுமாக இருந்தது. எனக்குப் பின்னர் பணியாற்றிய மருத்துவர் பா. கிருஷ்ணசாமி மற்றும் மருத்துவர் ஜி.எஸ். சாந்தி அவர்களின் தொடர் முயற்சியால் மத்திய அரசு சென்னையில் தேசிய முதியோர் நல மையம் அமைக்க ஒப்புதல் அளித்தது.



இடது – வலது திரு. இராஜசேகரன் மணிமாறன், நிர்வாக அறங்காவலர், டாக்டர் வி.எஸ். நடராஜன் முதியோர் நல அறக்கட்டளை, டாக்டர் எஸ். தீபா, இயக்குநர், தேசிய முதியோர் நல மருத்துவ மையம், பத்மஸ்ரீ டாக்டர் வி.எஸ். நடராஜன், முதியோர் நல மருத்துவர் மற்றும் தியாகி லக்ஷ்மிகாந்தன் பாரதி, I.A.S., (Retd.)

பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் 25–02–2024 அன்று காணொலி காட்சி மூலம் இம்மையத்தை தொடங்கி வைத்தார். அவ்விழாவில் நான் சிறப்பு அழைப்பிதழ் பேரில் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி வைத்தேன்.

மையம் தொடங்கப்பட்டு ஒரு மாதம் கழித்து அது எப்படி செயல்படுகிறது என்பதை தெரிந்து கொள்ள 21–03–2024 அன்று மையத்திற்கு சென்றிருந்தேன். மிக நல்லமுறையில் மையம் செயல்படுகின்றதை நான் கண்கூடாக பார்த்தேன். தினமும் 200 வெளிநோயாளிகள் பயனடைகிறார்கள். உள் நோயாளிகள் 100 பேர் சிகிச்சை பெற்று வருகிறார்கள். சில நோயாளிகளை விசாரித்ததில், இங்கு எங்களை நன்றாக கவனித்துக் கொள்கிறார், வார்டுக்கு வந்து உடனே காலதாமதமின்றி தக்க சிகிச்சையளிக்கிறார்கள் மற்றும் உணவும் வீட்டு உணவைப் போல நன்றாக இருக்கிறது என்கிறார்கள். மருந்துவர்கள், செவிலியர்கள் மற்றும் நோயாளிகள் அனைவரின் முகத்தில் ஒரு மகிழ்ச்சியை பார்க்க முடிகிறது.

தேசிய முதியோர் நல மருத்துவ மையம், கிண்டியில் சுமார் 8 ஏக்கர் நிலப் பரப்பில் 5 தளங்களை கொண்டு 200 படுக்கைகளுடன் வானுயர்ந்து இருப்பதை பாக்கும் பொழுது சுமார் 40 ஆண்டுகள் முன் கண்ட கனவு இப்பொழுது நினைவானது பார்த்து என் மனம் மிக்க மகிழ்ச்சியடைந்துள்ளது.

# மோரூர் சூரிய காங்கேயன்

தமிழகத்தின் மேற்குப்பகுதியான கொங்குநாட்டின் வடபகுதியில் அமைந்துள்ள மோரூரை தலைமையிமாகக் கொண்டு மோரூர் காங்கேய சிற்றரசர்கள் கி.பி.12 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.18 ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தனர். இவர்கள் சுமார் 70 தண்டிகை பெற்று தொடர்ந்து 60க்கும் மேற்பட்ட காங்கேயர்கள் வம்சா வழியாக இப்பகுதியில் ஆண்டனர். இதே கால கட்டத்தில் கொங்குநாட்டின் தென்பகுதியில் உள்ள காங்கேயத்தில் ஒரு சிற்றரசபரம்பரையினர் காங்கேயர்கள் என்ற பெரியல் ஆண்டவனர். இந்த இருவருக்கும் அதிக தொடர்பு இல்லை

கீழ்க்கரை பூந்துறை நாடானது தற்போது சங்ககிரி, திருச்செங்கோடு வட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகும். காவிரி ஆற்றின் கிழக்குப் பகுதியில் அமைந்ததால் இப்பெயர் உண்டாயிற்று. கீழ்கரை பூந்துறை நாட்டின் ஊர்த்தொகை பாடலில் 32 ஊர்கள் குறிப்பிடப்பட்டு அதில் முதன்மை ஊராக மோரூர் பாடப்பட்டுள்ளது. தற்போது இந்த ஊர் சங்ககிரிக்கும், திருச்செங்கோட்டிற்கும் இடையே சேலம் மாவட்டத்தில் சங்ககிரி வட்டத்தில் அமைந்துள்ளது.



தமிழக வரலாற்றில் கொங்குநாட்டில் பேரரசுகள் யாரும் நேரிடையாக ஆளவில்லை பதிலாக இவர்களுக்கு கீழ் அரசப்பிரதிநிதிகள் மற்றும் அவர்களுக்கு கீழ் மூன்றாம் நிலையில் இப்பகுதியில் சிற்றரசர்கள் ஆண்டனர். இதில் குறிப்பிடத்தக்கவர்கள் என்று பார்த்தோமானால் வடகொங்கு பகுதியில் மோரூர் காங்கேயர்கள் மற்றும் தாரமங்கலம் கெட்டி முதலி ஆகியோரை சொல்லலாம்.

மோரூர் காங்கேயர்கள் மதுரைபாண்டியர் ஹொய்சாளர்கள், விஜயநகரம், மதுரை நாயக்கர் ஆகிய பேரரசுகளுக்கு சிற்றரசர்களாக இப்பகுதியில் ஆட்சி புரிந்தனர். இவர்களின் பூர்வீகம் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்திற்கும், செம்பட்டிக்கும் இடையே உள்ள கன்னிவாடி என்ற கிராமமாகும் எதிரிகளின் மோதல் காரணமாக இவ்வூரைவிட்டு வடகொங்கு பகுதியில் உள்ள மோரூருக்கு கி.பி. 12 ஆம் நூற்றாண்டு துவக்கத்தில் குடியேறினர். இவர்களில் முதலாவது அரசனாக நல்லதம்பி என்பவர் இருந்துள்ளனர். இவருக்குப்பின் இந்த அரசபரம்பரையில் புகழ்பெற்ற சூரிய காங்கேயன் என்பவர் அரியணையேறினர்.

இவர் தமது இளம் வயதிலேயே மதுரை பாண்டிய அரசனின் படையில் ஈடுபட்டு சகல போர் வித்தைகளிலும் தேர்ச்சி பெற்றுபிறகு தனது சொந்த ஊருக்கு வந்து அரசராக பொறுப்பேற்றார்.

அன்றைய கால கட்டத்தில் சேலம் மாவட்டம் ஆத்தூருக்கு அருகேயுள்ள ஆறகளூர்

என்ற ஊரை தலைநகராகக் கொண்டு மகதநாடு என்று பெயர் கொண்ட இப்பகுதீயை வாணகோவரையன் என்ற அரசன் ஆண்டு வந்தான். இவன் தன்னுடைய ஆட்சிக்காலத்தில் மதுரை பாண்டியர், சோழ அரசர்கள், ஹொய்சாளர்கள் மற்றும் அதியமான் ஆகியோரை தன்னுடைய வீர பராக்கிரமத்தால் வெற்றி கொண்டான் மற்றும் இவர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கினான்.

இந்நிலையில் மதுரை பாண்டிய அரசன் நமது மோரூர் சூரிய காங்கேயனின் வீரத்தை ஏற்கனவே அறிந்தவனாதலால் அவனிடம் தனது முழுபடைகளையும் அனுப்பி அதற்கு தலைமயேற்று வாணகோவரையினை வென்று வரும்படி பணித்தான். சூரிய காங்கேயனும் உடனடியாக மகத நாட்டின்மேல் படையெடுக்கவில்லை. அதற்குமாறாக உளவாளிகளை அனுப்பி மூன்று மாதமாக அந்நாட்டின் படைகளின் நிலவரம் பற்றியும், அரசனின் நிலை பற்றியும் தகவல் சேகரித்தான். மகத அரசனை போரில் நேரடியாக சண்டையிட்டால் வெல்ல முடியாது என்பதை உணர்ந்த சூரிய காங்கேயன் வேறு வழியில் திட்டம் தீட்டி மழைக்காலம் வரும் வரை பொறுத்திருந்து பின்னர். கி.பி.1178 இல் சில நம்பிக்கையான படைவீரர்களை அழைத்துக் கொண்டு ஆறகளூர் சென்றார். ஒரு கட்டத்தில் தனிமையில் இருந்த மகத அரசனை தந்திரமாக பிடித்து சங்ககிரி மலைக்கோட்டையில் அப்போது தங்கியிருந்த பாண்டிய அரசனின் முன் நிறுத்தினான்.

இதனால் பாண்டிய மன்னன் மிகவும் அகமகிழ்ந்து சூரிய கங்கேயனுக்கு “மன்றாடி” என்ற பட்டமும், மீன்கொடியும் அளித்து கீழ்கரை பூந்துறை நாட்டிற்கு அதிகாரப்பூர்வ அரசனாக முடிசூட்டினான். மேலும் சிங்கமுகபல்லக்கு, சூரிய பாணம், வெண்தாமரை குடை ஆகியவற்றை கொடுத்து கௌரவித்தான். சூரிய காங்கேயனுக்கு “ஆகவராம பாண்டியன்” என்ற பட்டப்பெயருமுண்டு.

“கொங்கு மண்டல சதகம்” என்ற நூலில் பாடல் 84 இல் சூரிய காங்கேயனை பற்றி கீழ்கண்டவாறு பாடப்பட்டுள்ளது.

“பண்டாறை வாணனை முன்வெட்டாமற்பாண்டியனோ் கொண்டு வந்து நிற்க விட்ட கொற்றவனு நீயலையோ தெண்டிரை சேர் மோரூரிற் நென்னன் மகுடாசலனே மண்டலிகர் தேர்ந்து மெச்சவாழ்சூரிய காங்கேயனே”

பொதுவாக மோரூர் காங்கேயர்கள் போர்த்திறமை பெற்றவர்கள். இவர்கள் வேளாளர்ககண்ண குலத்தைச் சேர்ந்தவர்கள் சங்ககிரியைச்சேர்ந்த “எம்பெருமான் கவியரசா்” (கி.பி.1575 - 1650) என்பவர் காங்கேய சிற்றரசர்களால் ஆதரிக்கப்பட்டு “தக்கை இராமாயணம்” என்ற இசையால் பாட்டும் நூலை இயற்றினாா். இந்நூலில் பாடல் 25 இல் மோரூா் காங்கேயர்கள் கண்ண குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

பிற்காலத்தில் மதுரை நாயக்கர் ஆட்சியில் மதுரை கோட்டை கொத்தளங்களில் 72வது படைப்பிரிவாக இவர்களது படை நிரந்தர கண்காணிப்பில் இருந்துள்ளது. அரசியல் மாற்றத்தினால் கி.பி.1700க்குப்பின்னர் இவர்களது தனது படையுடன் பலகுழுக்களாக ஈரோடு மாவட்டம் “கொளாநல்லி” அருகேயுள்ள “கிழம்பாடி” கிராமத்திற்கு இடம் பெயர்ந்தனர். ‘பாடி’ என்பது படை வீரர்கள் தங்கும் பகுதி என குறிப்பதாகும்.

– நன்றி, ராஜேஸ்வரன்
S/o. காளியன்னன்

ஆசிரியர் : க.கருணாகரன் M.A.
சங்ககிரி